# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்

*11, JALAN GEREJA, 43000 KAJANG*
**தொலைபேசி எண்** : *03-8733 1154*
**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*

*Scan for updates*

பங்கு அருள்பணியாளர் : மறைதிரு. மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : மறைதிரு. பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
*pereiramargaret01@yahoo.com*

## பங்கின் திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| *02/11/2025* **(ஞாயிறு)** | **காலை 7.00**<br>**காலை** 9.30<br>**காலை** 11.30<br>**பிற்பகல்** 1.30 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு நாள் (இறந்த விசுவாசிகள் அனைவர்) |
| *03/11/2025* **(திங்கள்)** | **காலை** 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித மார்ட்டின் தெ போரஸ் (துறவி) |
| *04/11/2025* **(செவ்வாய்)** | **காலை** 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித சார்லஸ் பொரோமியோ (ஆயர்) |
| *05/11/2025* **(புதன்)** | **காலை** 7.00 | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| *06/11/2025* **(வியாழன்)** | **காலை** 7.00 | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| *07/11/2025* **(வெள்ளி)** | **காலை** 7.00 | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| *08/11/2025* **(சனி)** | **காலை** 7.00<br>**மாலை** 5.30<br>**மாலை** 6.00<br>**இரவு** 7:30 | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் செபம்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி யூ.பி.எம் | அன்றைய திருவழிப்பாடு<br>புதுநன்மை திருப்பலி |
| *09/11/2025* **(ஞாயிறு)** | **காலை 7.00**<br>**காலை** 9.30<br>**காலை** 11.30<br>**பிற்பகல்** 1.30 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழா<br>கோவில் நேர்ந்தளிப்பு ஆண்டு நாள்<br>புதுநன்மை திருப்பலி |

**உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி**
**வார இறுதி காணிக்கை 25/10 & 26/10 : RM 15,436.00**
**பங்கு புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள்** *26/10/2025* **:RM 256,851.11**

### *1. பங்கு அலுவலக இடமாற்றம்*

*பங்கு இல்லம் மற்றும் அலுவலக புதுப்பித்தல் பணிகள் நவம்பர் மாதம் தொடங்குவதால், பங்கு அலுவலகம் தற்காலிகமாக எண். 16 (Grd Flr) ஜாலான் S10/2, செக்சியன் 10, ஆஃப் ஜூலியன் புக்கிட், 43000 காஜாங் (முன்னர் Safe Aim Mutual) க்கு மாற்றப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.*

***No. 16 (Grd Flr) Jalan S10/2, Seksyen 10, Off Jln Bukit, 43000 Kajang (formerly Safe Aim Mutual).***

*எந்தவொரு அவசர நிலைக்கும், தயவுசெய்து பின்வரும் நபரை தொடர்பு கொள்க.*
*1. ஜெரார்ட் பின்டோ 016-3582565*
*2. செல்வா 012-3140025*
*இடமாற்றத்தை எளிதாக்க, அலுவலகம் 29/10 முதல் 31/10/25 வரை மூடப்படும்.*

## அறிவிப்புகள் & பங்கின் நிகழ்வுகள்

### 2. PIHD அன்பின் கிறிஸ்துமஸ் மரம்



*மிக விரைவில் வரவிருக்கும் கிறிஸ்துமஸ் மின்னும் மகிழ்ச்சியில் மூழ்கவிருக்கும் நாம், நமது பங்கின் வசதியற்ற குழந்தைகள் நமது இதய நெருக்கத்தில் கொண்டு வருவோம்.*

*25 அக்டோபர் 2025 க்குள் தேவாலய நுழைவாயிலில் ஒரு "அன்பின் மரம்" வைக்கப்படும். அனைத்துப் பங்கு உறுப்பினர்களும் பங்கேற்க வரவேற்கப்படுகிறீர்கள். மற்றவர்களும் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும் வகையில், ஒவ்வொரு குடும்பமும் 1 அட்டையை மட்டும் எடுத்துக்கொள்ள ஊக்குவிக்கின்றோம். தயவு செய்து பரிசுப் பொருளுடன் எடுத்த அட்டையை மீண்டும் அதிலே ஒட்டிவிடவும். மூடப்பட்ட பரிசுகளை டிசம்பர் 07, 2025 க்குள் திருப்பி அனுப்புவதன் மூலம் கிறிஸ்துமஸுக்கு இப்பரிசுகள் பெறுநர்களுக்குச் சென்றடைவதை உறுதிசெய்யமுடியும்.*
*மேலும் தகவலுக்கு, தயவுசெய்து சைமன் குவானை 0196000905 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.*

### 3. ஆர்கனிஸ்ட்கள் மற்றும் பாடகர்களை அழைக்கிறோம்!






*ஆங்கில பாடல் குழுவில் இணைய ஆர்வமா!*

*ஆர்கனிஸ்ட்கள் மற்றும் ஆண் பாடகர்களை நாங்கள் தேடுகிறோம்.*

*திருக்குடும்ப தேவாலயம் காஜாங் ஆங்கில பாடல் குழுவில் சேர்ந்து மகிழ்ச்சியான இறைவேண்டலில் ஒரு பகுதியாக இருக்க விரும்புவோர், மேலும் தகவலுக்கு, தயவுசெய்து **013-2638913** என்ற எண்ணில் வெனெசாவைத் தொடர்பு கொள்ளவும்.*

### 4. நிகழ்வு: கத்தோலிக்க மாணவர் சங்கம் UKM (CSSUKM) காலை உணவு விற்பனை



*நாள்: 02 நவம்பர், 2025*
*இடம்: திருக்குடும்ப தேவாலயம், காஜாங்*
*நோக்கம்: CSSUKM கழத்தின் திட்டங்களை ஆதரிக்கும் நோக்கத்திற்கான நிதி திரட்டல்*
*நேரம்: காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை*

### 5. குடும்ப நல வாழ்வு பணிக்குழு (தேசிய மொழி)

*கோலாலம்பூர் உயர்மறைமாவட்ட தேசிய மொழி குடும்ப நல வாழ்வு பணிக்குழு ஏற்பாட்டில் திருமணமான தம்பதிகளுக்காக திருமண உறுதிப்படுத்தல் தயாரிப்பு (குர்சஸ் பெம்பர்கடன் பெர்காவினன்) பணிமனை நடைபெற உள்ளது. இப்பணிமனையின் விவரங்கள் பின்வருமாறு:*
*நடவடிக்கை: குர்சஸ் பெம்பர்கடன் பெர்காவினன்*
*நாள்: சனிக்கிழமை, 15 நவம்பர் 2025, நேரம்: காலை 7.30 - மாலை 6.00*
*இடம்: கிறிஸ்து ஒளி ஆலயம், தேசா ஜெயா*
*பதிவுக்கான இறுதி தேதி: 10 நவம்பர் 2025*
*தொடர்பு: ரிக் அட்ரெஸ் (018-2413361) & மோனிகா மாவாஸ் (010-2450231) மின்னஞ்சல்: ricma.adres43@gmail.com, லாரா ஜோசப் (03-20220000), மின்னஞ்சல்: adminfamilylife@archkl.org*

### 6. புதுநன்மை நிகழ்வு




*அ)* **<u>புதுநன்மை ஒப்புரவு அறிக்கை (அனைத்து மொழிகளிலும்)</u>**
*நாள்: 07/11/2025, நேரம்: மாலை 7.30 – புக் பெரோவில் பதிவுடன் தொடங்கும்*

*ஆ)* **<u>புதுநன்மை திருப்பலி - ஆங்கிலம்</u>**
*நாள்: 08/11/2025, நேரம்: மாலை 6 திருப்பலி (எதிர்ப்பார்ப்பு திருப்பலி)*
** அனைத்து மாணவர்களும் புகைப்பட அமர்விற்காக மாலை 4.00 மணிக்கு தேவாலயத்தில் இருக்க வேண்டும்.*

*இ)* **<u>புதுநன்மை திருப்பலி – தேசிய மொழி மற்றும் மண்டரின்</u>**
*நாள்: 09/11/2025- குறிப்பிட்ட மொழிக்கான திருப்பலி நேரத்தில்.* புகைப்பட அமர்விற்கான நேரத்தை அறிய மறைக்கல்வி ஆசிரியரை நாடவும்.*

*ஈ)* **<u>புதுநன்மை திருப்பலி – தமிழ்</u>**
*நாள்: 23/11/2025, நேரம்: காலை 7.00 திருப்பலி* .* புகைப்பட அமர்விற்கான நேரத்தை அறிய மறைக்கல்வி ஆசிரியரை நாடவும்.*